


ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ நவம்பர். 01, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 29 ❖ ரூ.10

## தமிழகம் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடையும் நாள்

# பக்கத்தில்

## "உற்பத்தி மற்றும் சேவை துறையில் தமிழ்நாடு, உலகளவில் தலைசிறந்து விளங்கி வருகிறது இது மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பலனை ஏற்படுத்தும் ; முதல்வர் ஸ்டாலின் பேச்சு

**சென்னை, நவ. 1-**

**சென்னை பல்லாவரத்தில் கேபிட்டல் லேண்ட் ரேடியல் ஐடி பூங்கா என்ற தனியார் நிறுவனத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். பின்னர், இந்த நிகழ்ச்சியில் முதல்வர் பேசியதாவது: "உலகத்தரம் வாய்ந்த ஒரு தொழில்நுட்ப பூங்காவை, தமிழகத்தில் துவங்குவதற்காக இந்நிறுவனத்துக்கு எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**




தமிழகத்தில் புதியதொரு தொழிற்புரட்சி நடந்துகொண்டு வருகிறது. அதற்கு சான்றாக ஏராளமான தொழில் நிறுவனங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. அந்த வரிசையில், கேபிட்டல் லேண்ட் நிறுவனமும் இணைந்திருப்பது பெருமை அளிக்கிறது. 5 மில்லியன் சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்த சர்வதேச பூங்காவில், 50,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், பணிபுரியும் அளவுக்கு உலகத் தரம் வாய்ந்த கட்டிடங்களைக் கட்டித்தர நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது இன்று மிகமிக தேவையானதாக இருக்கிறது.

அதில், 1.3 மில்லியன் சதுரஅடிக்கான பூங்கா தயார் நிலையில் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்ட கட்டுமானப் பணிகளைத் தொடங்கியிருப்பதாக, இந்நிறுவனம் தெரிவித்திருக்கிறது. கேபிட்டல் லேண்ட் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத்திட்டத்துக்கும் தமிழக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்று உறுதியளிக்கிறேன். நான் கடந்த மே மாதம் சிங்கப்பூருக்கு அரசு பயணமாக சென்றிருந்தேன். அங்கு கிடைத்த வரவேற்பும் உற்சாகமும் மறக்க முடியாதது.

இந்த பயணத்தின்போது, கேபிட்டல் நிறுவனத்தின் சிஇஓ சஞ்சீவ்தாஸ் குப்தாவை சந்தித்து, அவர்களது நிறுவனம் பல தொழில் முதலீடுகளை தமிழகத்தில் மேற்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினேன். அதன் தொடர்ச்சியாக இந்த விழா நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது. "தட்டுங்கள் திறக்கப்படும்" என்று கூறுவார்கள், அதுபோலவே இது நடந்திருக்கிறது.

எங்களது ஆட்சி மீதும், தமிழகத்தின் மீதும் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில்துறையில் முன்னேறிய மாநிலமாக இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அதுமட்டுமின்றி இந்த வளர்ச்சி சீராகவும், பரவலாகவும் இருக்க வேண்டும் என்று மாநிலத்தில் இருக்கின்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் அடுக்கு நகரங்களையும் 9 நியோ டைடல் பூங்காக்கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்க்கின்ற வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளோடு துறைசார்ந்த தொழிற் பூங்காக்கள் அமைத்துக் கொண்டு வருகிறோம். வளர்ந்து வரும் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், துறைசார்ந்த கொள்கை அறிக்கைகளையும் வெளியிட்டு வருகிறோம். அந்தவகையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள், புத்தாக்கத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகிய திட்டங்களை தமிழகத்தில் பெருமளவு ஈர்ப்பதற்காக திட்டங்களைத் தீட்டினோம்.

உலக அளவில் வேகமாக ஏற்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நமது தொழில் துறையும் பயணம் செய்வது, இன்றியமையாத ஒன்று. இதற்கான முயற்சிகளை ஊக்கப்படுத்தி, இந்த துறைகளில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்தில்தான், தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை-2022, கடந்தாண்டு ஜூலை மாதம் என்னால் வெளியிடப்பட்டது. இதன்பின்னர், ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கம், புத்தொழில்கள் மற்றும் உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற துறைகளில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தொழில் துறை கல்வியாளர்கள், புத்தாக்கம் மேற்கொள்பவர்கள், மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு இது மிகப்பெரும் வாய்ப்புகளை வழங்குகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பாக, உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் Global Capability Centre (GCC)-கள் உடன், எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 30-க்கும் மேற்பட்ட GCC-க்கள், தங்களது புதிய நிறுவனங்கள் அல்லது விரிவாக்கத் திட்டங்களை நிறுவியுள்ளனர். UPS, Walmart, Hitachi Energy போன்ற சர்வதேச நிறுவனங்கள் தங்களது GCC, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களை அண்மையில் நிறுவியுள்ளனர்.

உற்பத்தி மற்றும் சேவை துறையில் தமிழ்நாடு, உலகளவில் தலைசிறந்து விளங்கி வருகிறது. இது மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய பலனை ஏற்படுத்தும். இந்த வேகத்தைப் பார்க்கும்போது 2030-ம் ஆண்டுக்குள், ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார மாநிலம் என்ற எங்களது இலக்கை அடைகிற நாள் வெகுதொலைவில் இல்லை, என்ற நம்பிக்கை எங்களுக்கு வளர்ந்துகொண்டே போகிறது" என்று முதல்வர் பேசினார்.

## கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் பேரவை தொடக்க விழாவினை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்



**புதுக்கோட்டை , நவ. 1-**

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில், டாக்டர் அப்துல்கலாம் கலையரங்கத்தில் நடைபெற்ற பேரவை (2023-2024) தொடக்க விழாவினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, மாணவிகளுக்கு மீண்டும் மஞ்சப்பையுடன் மரக்கன்றுகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்தவகையில், மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் 'புதுமைப் பெண்" திட்டம், உயர்நிலை அடைவதற்குரிய பயிற்சிகள் வழங்கும் 'நான் முதல்வன்" திட்டம் போன்ற பல்வேறு உயர்கல்வி சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் மாணவ, மாணவிகளின் கல்வி ஆர்வம் தூண்டப்பட்டு, அதிக அளவிலான மாணவ, மாணவிகள் உயர் கல்வி பயில்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

மேலும் இக்கல்லூரியில் 2023-2024 –ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை தலைவர;கள், உறுப்பினர்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கணிதம், இயற்பியல், விலங்கியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலிருந்தும் இப்பேரவைக்கான தலைவர்கள், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கான பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் கல்வி பயிலும் பொழுதே தலைமைத்துவம், ஒருமைப்பாடு உள்ளிட்டவைகளில் சிறந்து விளங்கிட வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் உறுப்பினர்களின் பணிசார்ந்த உறுதிமொழியினை வாசிக்க அனைவரும் பின்தொடர்ந்து வாசித்து உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் உயர்கல்வியில் சிறந்து விளங்கி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மட்டுமின்றி தமிழகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, கல்லூரி முதல்வர் ஜெ.சுகந்தி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கே.செல்வக்குமார், வட்டாட்சியர் கவியரசன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் சந்திரசேகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# சர்தார் வல்லபாய் படேல் பிறந்தநாளை முன்னிட்டு தேசிய ஒற்றுமை தின விழா



புதுக்கோட்டை , நவ.01–

இந்தியாவின் இரும்பு மனிதர் எனப் போற்றப்படும் சர்தார் வல்லபாய் படேல் பிறந்த நாளை முன்னிட்டு, இந்திய அரசு புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவ கேத்திரா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி ஆகியவை இணைந்து தேசிய ஒற்றுமை தின விழாவினை நடத்தினர்.

விழாவிற்கு மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி முதல்வர் நாகேஸ்வரன் தலைமை வகித்து சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில், நம் நாட்டின் ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் இந்தியாவின் இரும்பு மனிதராகிய சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பங்கு மிக முக்கியமானது எனவும் அவரது அயராத உழைப்பை இளம் தலைமுறையினர் எப்போதும் நினைவு கூறும் வகையில் நம் தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனவும் கூறினார்.

விழாவிற்கு மாமன்னர் கல்லூரி ஆங்கிலத்துறை பேராசிரியர் கணேசன் முன்னிலை வகித்தார். நேரு யுவ கேந்திராவின் திட்ட உதவி அலுவலர் நமச்சிவாயம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டுப் பயிற்றுநர்கள் அன்பழகன் பவித்ரா ஆகியோர் 'வாழ்த்துரை வழங்கினர். விழாவில் கல்லூரி மாணவ மாணவியர் சுமார் 100 பேர் பங்கேற்றனர். விழாவில் பங்கேற்ற அனைவரும் தேசிய ஒற்றுமை உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். விழா ஏற்பாடுகளை நேரு யுவ கேந்திராவைச் சேர்ந்த ரம்யா சிறப்பாக செய்திருந்தார்.

# கலைஞரின் நூற்றாண்டு விழாவினையொட்டி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புதுக்கோட்டை மாவட்ட அளவிலான போட்டிகள்



புதுக்கோட்டை, நவ.1–

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, வினாடி, வினாப்போட்டி, ஓவியப்போட்டி ஆகிய போட்டிகள் தொடக்க விழா புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலகத்தேர்வுக்கூட அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, வழிகாட்டலுடன் நேற்று நடைபெற்றது.

வந்திருந்த அனைவரையும் மாவட்டச்சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் மெ.சி. சாலைசெந்தில் வரவேற்று பேசினார். நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலைக்கல்வி) ஆ.இரமேஷ், புதுக்கோட்டை மாவட்டக்கல்வி அலுவலர்கள் ( தொடக்கக்கல்வி) செந்தில், ( தனியார் பள்ளிகள் ) அறவாளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட தனித்துணை ஆட்சியர்(சமூக பாதுகாப்பு திட்டம்) எம்.செய்யது முகம்மது கலந்துகொண்டு தலைமை தாங்கி போட்டியினை தொடங்கிவைத்து பேசும்போது கூறியதாவது, முத்தமிழறிஞர் கலைஞர் பெண்களுக்காகவும், மாணவ,மாணவிகளுக்காகவும் எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளார்கள்.

அவரைப்போல நீங்கள் சமூகப்பணியாற்ற வேண்டும்,சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் அவரது நூற்றாண்டு விழாவினையொட்டி பள்ளி மாணவ, மாணவிகளாகிய உங்களுக்கு கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, வினாடி, வினாப்போட்டி, ஓவியப்போட்டி ஆகிய போட்டிகள் மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது. ஆசிரியர்கள் உங்களின் எதிர்கால நலனுக்காகத்தான் கண்டிக்கிறார்கள் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு செயல்பட்டால் எதிர்கால இலக்கினை எளிதில் அடையலாம். தோல்வியே வெற்றிக்கு முதல்படி. இங்கு பங்கேற்பவர்கள் அனைவரும் வெற்றி பெற இயலாது. எவரேனும் ஒருவர் தான் வெற்றி பெற இயலும். ஆதலால் தோல்வியை கண்டு துவண்டுவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றியை தன் வசமாக்கலாம். முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் கூறியதைப்போல கனவு காணுங்கள் என்பதை நீங்கள் மனதில் இருத்தி உயர்ந்த எண்ணத்தினை நீங்கள் நினைத்துக்கொண்டு பயிற்சியும், முயற்சியும் செய்தால் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தினை அடையலாம். உங்களை உற்சாகப்படுத்தவேண்டும், ஊக்கப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் மாவட்ட அளவிலான இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ10 ஆயிரம் ரொக்கப்பரிசினையும், பாராட்டுச்சான்றிதழையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்க உள்ளார்கள். இந்த அரிய வாய்ப்பினை நீங்கள் பயன்படுத்திக்கொண்டு வெற்றி பெற வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்( மேல்நிலை) முருகையன், தொடக்கக்கல்வியின் உதவித்திட்ட அலுவலர் ( பொ) தங்கமணி, முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்(இடைநிலை) ராஜூ, பள்ளித்துணை ஆய்வாளர் குரு. மாரிமுத்து மற்றும் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக பள்ளித்துணை ஆய்வாளர் கி.வேலுச்சாமி நன்றி கூறினார்.






திருநெல்வேலிமாவட்டம் சிவகிரி பாரத் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிக்கு தொடர் அங்கீகார சான்றிதழ் வழங்கி ஆணை பிறப்பித்த பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ராதாபுரம் சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவும், தமிழக சட்டப்பேரவை தலைவருமான மு. அப்பாவு-விடம் சிவகிரி பாரத் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளித் தாளாளரும் ,திமுக மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளருமான மருத்துவர் சு.செ. செண்பக விநாயகம் சான்றிதழ் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி எம்பி ஞான திரவியம், நெல்லை மேயர் சரவணன் மற்றும் பள்ளி கல்வித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தென்காசியில் காங்கிரஸ் சார்பில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 39 வது நினைவு தினம்



தென்காசி, நவ.01–

தென்காசியில் முன்னாள் பாரதபிரதமர் இந்திரா காந்தியின் 39 வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது, தென்காசி ஆசாத் நகரில் அமைந்துள்ள இந்திரா காந்தியின் சிலைக்கு தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவரும், தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான எஸ். பழனி நாடார் தலைமை வகித்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு தென்காசி நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர் முன்னிலை வகித்தார், அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் விஸ்வநாதன் சிறப்புரை ஆற்றினார், இதில் பயங்கரவாத எதிர்ப்பு நாள் உறுதிமொழியினை அனைவரும் எடுத்துக் கொண்டனர்,இந் நிகழ்ச்சியில் மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் உதய கிருஷ்ணன், மருத்துவர் சங்கரகுமார், மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.ஜி.எம் கணேசன், சபரி முருகேசன், கண்ணன், சந்தோஷ்,வட்டாரத் தலைவர் பெருமாள், கவுன்சிலர்கள் காதர் மைதீன், சுப்பிரமணியன், ரபீக், நகர பொருளாளர் ஈஸ்வரன், பிரேம் குமார், தியாகராஜன், சித்திக், பலவேசம், நரி சேட், சுடலை, முத்தையா, மனோரமா, திரவியம், முருகன், காசி ஆறுமுகம், தாதா பீர், மணிகண்டன், தேவேந்திரன், பிரபு உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# வினாடி வினாப் போட்டியில் புதுக்கோட்டை மா.மன்னர் கல்லூரி மாணவர்கள் சாதனை



புதுக்கோட்டை , நவ.01–

தமிழக அரசின் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் என்எஸ்இ அகடெமி நடத்திய திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரிகளுக்கிடையேயான வினாடி வினாப் போட்டியில் மா.மன்னர் கல்லூரி வணிகவியல் துறை மூன்றாமாண்டு மாணவர்கள் ஜித்தேஷ்குமார்,ஹரிஷ்குமார்,சிற்றரசு.போவாஸ் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் பங்குபெற்று இரண்டாம் பரிசு ரூ.50 ஆயிரத்தை வென்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவர்களை கல்லூரி முதல்வர்(பொ) நாகேஸ்வரன், வணிகவியல் துறைத்தலைவர் மு.கலைச்செல்வி, வணிகவியல் துறைப்பேராசிரியர்கள் மற்றும் கௌரவ விரிவுரையாளர்கள், நான் முதல்வன் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.வேலுசுரேஷ்குமார். பிற துறைத்தலைவர்கள். பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் வாழ்த்திப் பாராட்டினர்.



புதுக்கோட்டை மாவட்டம் மழையூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி நிறைவு பெற்ற தமிழ்ச்செல்வனுக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது, இதில் உதவி ஆய்வாளர்கள் சாமிக்கண்ணு, மரியதாஸ்,தனிப்பிரிவு முருகேசன் மற்றும் காவலர்கள் வாழ்த்தினர்.

# அரியலூரில் தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம்



அரியலூர்,நவ.1–

அரியலூரில் தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது, இது பற்றி சங்கத்தின் அரியலூர் மாவட்ட தலைவர் வடிவேல் வெளியிட்ட செய்தி குறிப்பு

அரியலூரில், தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்க ஆலோசனைக் கூட்டம் சன் டிவி ஞானசேகர் அலுவலக வளாகத்தில், மாவட்டத் தலைவர் வடிவேல் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்டச் செயலாளர் சன் டிவி ஞானசேகர் முன்னிலை வகித்தார், இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சங்கத்தின் வளர்ச்சி குறித்தும்,சங்கஉறுப்பினர்களின் நலத்திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது, மேலும் பண்ருட்டியில் நடைபெறவிருக்கின்ற, தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கத்தின் 21 வது மாநில மாநாடு குறித்து, அரியலூர் மாவட்ட சங்கத்தின் பங்களிப்பு குறித்து உறுதி செய்யப்பட்டது.

இதில் தினசங்கு மாவட்டச் செய்தியாளர் பெர்னாட்ஷா வரவேற்புரை ஆற்றினார், தினமடை செய்தியாளர் பாபு, மாலை இதழ் செய்தியாளர் கார்மேகம், இன்றைய தமிழகம் செய்தியாளர் சுவாமிநாதன், உள்ளாட்சி சாரல் செய்தியாளர் காந்தி, தந்தி முரசு செய்தியாளர் மலைக்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர், நிகழ்ச்சியின்முடிவில்சங்கத்தின் மாவட்டச் செய்தி தொடர்பாளர் கார்த்திகேயன் நன்றியுரை வழங்கினார்.

# சங்கரன்கோவிலில் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் : எம்எல்ஏ ராஜா துவக்கி வைத்தார்



சங்கரன்கோவில், நவ.1

சங்கரன்கோவில் வட்டார வளமையத்தின் சார்பில் 6 முதல் 18 வயது வரை உள்ள மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வைத்து நடைபெற்றது.

தென்காசிவடக்குமாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்து முகாமை துவக்கி வைத்தார், மேலும், முகாமில் தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு நடைபயிற்சி உபகரணங்கள் (வாக்கர்), தேசிய அடையாள அட்டை போன்ற நலத் திட்ட உதவிகள் வழங்கினார். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள் குறித்து பேசினார். வட்டார வளமைய மேற்பார்வையாளர் முத்துசெல்வி வரவேற்றார், ஆசிரியர் பயிற்றுநர் ஆனந்தராஜ் பாக்கியம் நிகழ்வினை தொகுத்து வழங்கினார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ் நோக்கவுரை ஆற்றினார், கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை தெய்வபிரியா வாழ்த்துரை வழங்கினார், முகாமில் மனநல மருத்துவர் தேவிபிரபா கல்யாணி, காது மூக்கு தொண்டை மருத்துவர் ஜெயலட்சுமி, கண் மருத்துவர் முகமது அப்துல்லா, எலும்பு முறிவு மருத்துவர் விஸ்வநாத் பிரதாப்சிங் ஆகிய மருத்துவர்கள் கலந்து கொண்டு குழந்தைகளை பரிசோதனை செய்தனர், தகுதியான குழந்தைகளுக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் வாக்கர் போன்ற உபகரணங்கள் உடனடியாக வழங்கப்பட்டது.

மேலும், காது கேட்கும் கருவி, ஸ்மார்ட் கார்ட், ட்ரெயின் பாஸ், பஸ் பாஸ், மாதாந்திர உதவி தொகை , பெற்றோர்களுக்கு தையல் இயந்திரம், வீல் சேர், கேலிபர், ட்ரை சைக்கிள் போன்ற உபகரணங்கள் வழங்குவதற்கு தகுதியான குழந்தைகள் மருத்துவர்கள் பரிந்துரையின் பேரில் தேர்வு செய்யப்பட்டனர். இதில் திமுக மாவட்டப் பொருளாளர் சரவணன், நகர செயலாளர் பிரகாஷ், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் கார்த்திக், மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர் வீரமணி, வீராசாமி தகவல் தொழில்நுட்ப அணி ஜெயகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், முடிவில் சிறப்பாசிரியர் சிவகுமார் நன்றி கூறினார், ஏற்பாடுகளை சங்கரன்கோவில் வட்டார ஆசிரியர் பயிற்றுநர்கள், சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

# தேக்வாண்டோ விளையாட்டு போட்டியில் புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் கல்லூரி மாணவி வெள்ளி பதக்கம் வென்று சாதனை



புதுக்கோட்டை,நவ.1–


அண்ணா பல்கலைக்கழக மண்டலங்களுக்கு இடையேயான தேக்வாண்டோ போட்டி அரசு பொறியியல் கல்லூரி, பர்கூரில் நடைபெற்றது. இதில் அண்ணா பல்கலைக்கழகங்களின் அனைத்து உறுப்பு கல்லூரிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர், இப்போட்டியில் 57கிலோ எடை பிரிவில் செந்தூரான் பொறியியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்பியல் துறை மாணவி எம்.ரேகா, கலந்து கொண்டு வெள்ளிப்பதக்கம் வென்று கல்லூரிக்குப் பெருமைப் சேர்த்துள்ளார்.

இப்போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை புரிந்த மாணவியை கல்லூரி நிர்வாகம் சார்பாக ஏ.வி.எம்.எஸ்.கார்த்திக், முதன்மை செயல் அதிகாரியும் கல்லூரியின் முதல்வர் கே. கணேஷ்பாபு ஆகியோர் வெகுவாக பாராட்டி ஊக்கப்படுத்தினர், இந்நிகழ்வில் கல்லூரியின் தலைவர்ஏ.வி.எம். செல்வராஜ், துணைத்தலைவர் சோம. நடராஜன், மேலாண்மை இயக்குநர் ஆர். வயிரவன், செயலர் டி. தியாகராஜன், நிர்வாக இயக்குனர் எம். பாண்டிகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டுசிறப்பித்தனர்.

# ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தேசிய ஒற்றுமை தினக் கொண்டாட்டம்

*ஆவுடையார்கோவில், நவ.1–*

*இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல் பிறந்தநாளான அக்டோபர் 31 ஆம் நாள் நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்படுகிறது.*



*ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் தேசிய ஒற்றுமை தினம் கொண்டாடப்பட்டது, இன்றைய வழிபாட்டு கூட்டத்தில் பள்ளித் தலைமையாசிரியர் தாமரைச்செல்வன் மற்றும் மாணவ,மாணவிகள், சார்தார் வல்லபாய் படேல் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .*

*முதுகலை வரலாற்று ஆசிரியர் மதியழகன் , சர்தார் வல்லபாய் படேல் வாழ்கை வரலாற்றையும், சுதந்திர இந்தியாவை ஒருங்கிணைத்த விதத்தினையும் எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார், மேலும் தேசிய ஒற்றுமை தின உறுதிமொழியை இயற்பியல் ஆசிரியர் ராஜேந்திரன் வாசிக்க அனைவரும் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் உதவி தலைமை ஆசிரியர் ஸ்டாலின் உள்பட அனைத்து ஆசிரியர் பெருமக்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

# ஒருங்கிணைந்த எல்லாபுரம் ஒன்றியம் மற்றும் ஊத்துக்கோட்டை நகர விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயற்குழு கூட்டம்





ஊத்துக்கோட்டை, நவ.1-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதியை சேர்ந்த ஒருங்கிணைந்த எல்லாபுரம் ஒன்றியம் மற்றும் ஊத்துக்கோட்டை நகர விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் செயற்குழு கூட்டம் தண்டலம் பஜாரில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, எல்லாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கயடை அறிவுச்செல்வன் தலைமை தாங்கினார். அனைவரையும் எல்லாபுரம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் காக்கை முருகேஷ் வரவேற்றார்.

எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கன்னிகை சந்தோஷ், ஊத்துக்கோட்டை நகர செயலாளர் விஷ்ணுதரன் மற்றும் பொருளாளர் ஜெபா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில்,சிறப்பு அழைப்பாளர்களாக ஆந்திர மாநில செயலாளர் சத்தியவேடு சாம்சன், அச்சு ஊடக மையத்தின் மாநில துணை செயலாளர் வெங்கல் பாக்சர் மணி,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொருளாளர் தண்டலம் தமிழ்ச்செல்வன், மாவட்ட துணை செயலாளர்கள் வெற்றிச்செல்வன், சக்கரவர்த்தி,வெங்கல் பெரியவர் தாந்தோனி, கும்மிடிப்பூண்டி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் பா.நேசகுமார்,கும்மிடிப்பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் மாநெல்லூர் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இந்த செயற்குழு கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் சுதாராணி,அரிவழவன், சரவணன், அகன்ராஜ், சீனிவாசன்,பாண்டி,ராமமூர்த்தி, தீனதயாளன், செல்வம், தினேஷ், செல்வம், தமிழரசன், ஏழுமலை, சந்தோஷ், கார்த்திக் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், கட்சியின் தலைவர் எழுச்சி தமிழரின் கரத்தை வலுப்படுத்தும் வகையில் டிசம்பர் 23-ம் தேதி திருச்சியில் நடைபெறும் "வெல்லும் ஜனநாயகம்" மாநாட்டிற்கு ஒரு ஒன்றியத்தில் சுமார் 500 நபர்கள் செல்வது என்றும், 2024-ல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எழுச்சி தமிழர் அவர்களின் ஆதரவு பெற்ற வேட்பாளரை வெற்றி பெறச் செய்வது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக மறைந்த முதன்மை செயலாளர் உஞ்சை அரசனுக்கு வீரவணக்கம் மற்றும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் எல்லாபுரம் சுற்று வட்டார பகுதிகளான சிற்றம்பாக்கம், லட்சிவாக்கம், சூளைமேனி,செங்கரை, கீழ்க்ரமனூர் கண்டிகை, கண்டிகை, கயடை, சிறுனை, மற்றும் ஊத்துக்கோட்டை நகரத்தை சேர்ந்த இளைஞர்கள், சட்டம் பயிலும் மாணவர்கள், வழக்கறிஞர்கள், பட்டதாரிகள் மற்றும் வன்னியர் சமூகத்தை சேர்ந்த நீலகண்டன், இஸ்லாமிய பெண் ஜாஸ்மீன் ஆகிய 50-க்கும் மேற்பட்டோர் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் தங்களை இணைத்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில்,தண்டலம் பிரசாந்த் என்ற பேரறிவாளன் நன்றி கூறினார்.



▶ இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று காலை 9.00 மணியளவில் காரைக்கால் கடற்கரைச் சாலையில் அலங்கரித்து வைக்கப்பட்ட அவரது திரு உருவ படத்திற்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. உடன் இந்நிகழ்வில் வனத்துறை அதிகாரி விஜி, துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன், துணை ஆட்சியர் செந்தில்நாதன், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் (பொருப்பு) நித்தின் குமார் கவுஹால் காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்ரமணியன் முதன்மை கல்வி அதிகாரி விஜய மோகனா, செய்தி மற்றும் விளம்பரத் துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) குலசேகரன் மற்றும் காவல்துறை ஆய்வாளர்கள் உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர். பிறகு காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. மேலும் ஆட்சியர் தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் அவரது திருஉருவ படத்திற்கு காவல்துறையினர் இரண்டு நிமிடம் மரியாதை செலுத்தினர்.



▶ வடலூரில் வள்ளலார் முத்தமிழ் பேரவை சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் வள்ளலார் வாழ்வியல் நெறி நூல் வெளியிடப்பட்டது. இந்நூலில் வள்ளலார் வகுத்த வாழ்வியல் நெறி என்றதலைப்பில் கவிஞர் கனகவள்ளி கவிதைபதிவிட்டிருந்தார், இவ்விழாவில் காரைக்காலைச் சேர்ந்த கவிஞர் அ.கனகவள்ளிக்கு வள்ளலார் ஞான ஒளி விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இவ்விழாவில் வள்ளலார் முத்தமிழ் பேரவை நிறுனர் இரா. செந்தில் குமார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பேரன் குலசை வேலுப்பிள்ளை, புதுச்சேரி வேலு நாச்சியார் தமிழ் சங்கத்தின் நிறுவனர் கலைவரதன், சென்னை சேவை ரத்னா தஞ்சை தாசன் மற்றும் பலர் கலந்து கொண்டு விருது கொடுத்து விழாவினை சிறப்பு செய்தனர்.

நீட்டை ஒழிக்க பத்தாயிரம் பேரிடம் கையெழுத்து பெற

# திமுக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி இலக்கு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்



திருவள்ளூர், நவ.1-

நீட் விலக்கு நம் இலக்கு என்ற கையெழுத்து இயக்கத்தை திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சமீபத்தில் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து திமுக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர்ஆனந்த், மாநிலச் செயலாளர் செங்குட்டுவன் ஆகியோர் அறிவுறுத்தலின் பேரில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி திருவள்ளூர் மாவட்ட அமைப்பாளர் ஜி வேலாயுதம் தலைமையில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற இயக்கத்தின் நீட்டை ஒழிப்போம் மாணவர்களை காப்போம் என்ற கோட்பாட்டின் கையெழுத்து பெறுவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் தலைவர் மனோகரன், துணை தலைவர் துரைகோபு, துணை அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், டி.பாலசுப்ரமணியம், என் சதீஷ், ஜே.சுபான், ராஜி, எஸ் மஸ்தன் ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் நீட்டை ஒழிப்போம் மாணவர்களை காப்போம் நான் நீட்டை எதிர்க்கிறேன் என மாவட்டம் முழுவதும் சுமார் 10,000 ஒப்புதல் கையெழுத்து வாங்க வேண்டும்.

பேருந்து நிறுத்தம் ரயில் நிறுத்தம் ஆகிய இடங்களில் பெயர் பலகைகள் வைத்து அதிக நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும் நகர ஒன்றிய பேரூராட்சிகளில் தலைவர் துணைத் தலைவர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் தேர்வு செய்திட மாவட்ட செயலாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.

இல்லம் தோறும் சென்று நீட்டால் மாணவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து விளக்கிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது

# குடிநீர் குழாயில் கழிவுநீர் கலந்து வருவதாக அறந்தாங்கி நகராட்சியை முற்றுகையிட்ட பொதுமக்கள்



அறந்தாங்கி,நவ.1-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி நகராட்சி பகுதிகளில் மொத்தம் -27 வார்டுகள் உள்ளது, 16-வது வார்டு மணிவிளான்தெருவில் பொதுமக்கள் குடிநீர் குழாயில் கழிவுநீர் கலந்து வருவதாக நகராட்சி அலுவலகம் முன்பு கையில் குடிதண்ணீருடன் கழிவுநீர் கலந்த தண்ணீர்பாட்டிலை கையில் வைத்துக்கொண்டும் திமுக கவுன்சிலர் யாசர் ஹமீதுக்கு எதிராக பதாகையை கையில் ஏந்தியும் நகராட்சி அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் நகராட்சி அதிகாரிகளுக்கு எதிராகவும் கவுன்சிலருக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பி போராட்டம் நடத்தினர், இது தொடர்பாக பொதுமக்களிடம் ஆணையர் பாலகிருஷ்ணன் நேரில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார், ஆணையரின் பேச்சு வார்த்தையை அடுத்து பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டனர்

இது குறித்து பொதுமக்கள் தெரிவிக்கும் பொழுது,

தங்கள் பகுதிகளில் கழிவுநீர் செல்வதற்கான வேலை நடைபெற்றது அதற்காக சாலைகளில் தோண்டப்பட்டு வேலை நடைபெற்ற நிலையில் சாலையை முழுமையாக சீரமைக்காமலும் அதன் பிறகு தொடர்ச்சியாக கடந்த 10 நாட்களுக்கு மேலாக குடிநீர் குழாயில் கழிவுநீர் கலந்து வருவதால் தாங்கள் பெரும் அவதிக்கு உள்ளாகினோம் என்றும்,

தனியார் வாகனத்தில் காசு கொடுத்து தண்ணீர் வாங்குவதற்கு கூட வாகனம் வரமுடியாத சூழ்நிலையில் சாலைகளும் மிகவும் மோசமாக இருப்பது தொடர்பாக அதிகாரிகளிடமும் திமுக கவுன்சிலர் யாசர் ஹமீதிடமும் பலமுறை புகார் கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததால் தாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தனர்.

# கல்வித்துறை அமைச்சருடனான பேச்சுவார்த்தை தோல்வி: டெட் தேர்வு பட்டதாரிகள் விரக்தி



சென்னை, நவ. 1-

டெட் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன், தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷுடன், டெட் பட்டதாரிகள் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

டெட் எனப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென, டெட் தேர்வு பட்டதாரிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் டெட் தேர்வுக்கு பிறகு வேலைவாய்ப்பு பெற மற்றொரு போட்டித் தேர்வை எதிர்கொள்ள வேண்டும்என அரசாணை வெளியிடப்பட்டது.

இதனிடையே திமுக தனதுதேர்தல்அறிக்கையில் இந்த அரசாணை ரத்து செய்யப்படும் என தெரிவித்திருந்தது. இந்நிலையில், அதே அரசாணையை பின்பற்றி போட்டி தேர்வு குறித்த அறிவிப்பாணையை ஆசிரியர் தேர்வு வாரியம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இதன்படிஅரசுபள்ளிகளில் 2,222 பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கான போட்டி தேர்வு ஜனவரி 7-ம் தேதி நடைபெறும் எனவும் இதற்கான ஆன்லைன் பதிவு நவம்பர் 1-ம் தேதி தொடங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் டெட் தேர்வில் எடுக்கப்பட்ட மதிப்பெண்கள் அடிப்படையில் வெயிட்டேஜ் மதிப்பெண்களையும் தமிழ்நாடு அரசு வெளியிட்டது.

இந்நிலையில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் போட்டித் தேர்வு அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும் எனவும் டெட் தேர்வு மதிப்பெண் அடிப்படையிலேயே பணி நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் டெட் பட்டதாரிகள் வலியுறுத்தினர்.

இது தொடர்பாக டெட் பட்டதாரிகள் சங்க நிர்வாகிகளுடன் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையின் போது,நீதிமன்றஉத்தரவின் அடிப்படையிலேயே பணி நியமன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதனை டெட் பட்டதாரிகள் சங்கத்தினர் ஏற்காத நிலையில் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனிடையே மதுரை உயர் நீதிமன்ற கிளையில் இது தொடர்பாக வழக்கு தொடர்ந்திருப்பதாகவும், ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்ட போட்டித்தேர்வு அறிவிப்பிற்கு தடையாணை பெற நடவடிக்கை எடுத்து வருவதாகவும் டெட் பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# அரியலூர் அருகே தேளூரில் திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்



அரியலூர்,நவ.1-

அரியலூர் அருகே தேளூரில் திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அரியலூர் மாவட்டம், அரியலூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில், தேளூர் கிராமத்தில் உள்ள ராஜா மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற, தெற்கு ஒன்றிய திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் பாக நிலை முகவர்கள் ஆலோசனைக்கூட்டம்,கட்சியின் அரியலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மா. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது, ஒன்றிய சமூக வலைத்தள ஒருங்கிணைப்பாளர் குப்புசாமி வரவேற்று பேசினார்.

அரியலூர் தெற்கு ஒன்றியத்துக்குஉட்பட்ட தேளூர், விளாங்குடி, ரெட்டிபாளையம், சிறுவளூர், காவனூர், நாகமங்கலம், புதுப்பாளையம், பெரிய திருக்கோணம், ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் பாக நிலை முகவர்கள் பற்றி ஆய்வு மேற்கொண்ட, திமுக அரியலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கவிஞர் சல்மா சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், திமுக மாவட்ட துணைச் செயலாளர் லதா பாலு, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மீனாசாமிநாதன்,ஒன்றியஅவைத் தலைவர் சண்முகம், மாவட்ட பிரதிநிதி முருகேசன், துணைச் செயலாளர் பழனியாண்டி, பொருளாளர் நடராஜன், மற்றும் காத்தான்குடிக்காடுகோவிந்தராஜ், கருணாநிதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக,அரியலூர்தெற்கு ஒன்றியம் சுண்டக்குடி, அரிய தங்கம் திருமண மண்டபத்தில், ஒன்றியச் செயலாளர் மா. அன்பழகன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மேலக்கருப்பூர், இடையத்தான்குடி, புங்கங்குழி, ஆண்டிபட்டாக்காடு, கருப்பிலாக்கட்டளை,சுண்டக்குடி, ஆலந்துறையார்கட்டளை, உள்ளிட்ட ஊராட்சிகளுக்கான பூத் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் பாக நிலை முகவர்கள் பற்றி ஆய்வு நடத்திய, தொகுதி பொறுப்பாளர் கவிஞர் சல்மா சிறப்புரையாற்றினார்.

# புதுக்கோட்டையில் விபத்தில்லா தீபாவளி கொண்டாட்டம்



புதுக்கோட்டை,நவ.1-

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கம், புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் இணைந்து எட்டாம் ஆண்டு தொடர் சேவையாக விபத்தில்லா தீபாவளி கொண்டாட்டம் அரசு உயர் துவக்கப்பள்ளி வளாகத்தில் புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் அசோகன் தலைமையில் நடைபெற்றது.

ரோட்டரிபிரார்த்தனையை 16வது வார்டு நகர் மன்ற உறுப்பினரும், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க துணைத் தலைவருமான சேட் என்ற அப்துல் ரஹ்மான் ரோட்டரி பிரார்த்தனை வாசித்தார் முன்னதாக வருகை தந்த அனைவரையும் அரசு உயர் துவக்கப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் வரவேற்றார், பள்ளி தலைமை ஆசிரியர் சிவசக்திவேல், 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் செந்தாமரை பாலு, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ரெத்தினம், பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் மாரிக்கண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர், நகர காவல் நிலைய ஆய்வாளர் மருது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார் குழிபிறை ஊராட்சி மன்றத் தலைவர் அழகப்பன் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார், சங்க பொருளாளர் சங்கர், ஆரவாமுதன், திட்ட இயக்குனர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியினை சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி கண.மோகன் ராஜா, செயலாளர் இப்ராஹிம் பாபு, பொருளாளர் பிரசாத் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர் நிகழ்ச்சியில் யோகேஸ்வரன், தங்கராஜா, சேகர், தயாளன் ஓம்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர், நிறைவாக புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க செயலாளர் முத்தன் அரசகுமார் நன்றி கூறினார்.

மாநில அரசு நிறைவேற்றி அனுப்பிய

# சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் உள்ள ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு



சென்னை, நவ. 1-

ஆளுநர் ஆர். என் ரவி மசோதாக்களை கிடப்பில் வைத்திருப்பதற்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு தொடுத்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகவே ஆளுநருக்கு எதிராக போராட்டங்கள் நடந்து வருகின்றன. குறிப்பாக தமிழர்கள், தமிழக கலாசாரம், மொழி, இலக்கியம், வழிபாடு உள்ளிட்ட பிரச்னைகளை ஆளுநர் ஆர்.என்.ரவி கிளப்பி வருகிறார். மேலும், தமிழக அரசு கொண்டு வரும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களுக்கும் அவர் முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் அரசியல் கட்சியினர் குற்றம்சாட்டி வருகின்றனர். குறிப்பாக நீட் பிரச்னைக்காக தமிழக சட்டப்பேரவையில் கொண்டு வந்த தீர்மானத்தை ஜனாதிபதிக்கு அனுப்பாமல் காலம் தாழ்த்தி வந்ததாகவும் குற்றச்சட்டு எழுந்தது.

கூட்டுறவுசங்கங்களுக்கான பதவிக்காலத்தை 3 ஆண்டுகளாக குறைக்கும் மசோதா உள்ளிட்ட 13 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் இருப்பது, முன்னாள்அமைச்சர்கள்மீதான குற்றச்சாட்டுக்கு நடவடிக்கை எடுக்க அனுமதிக்காமல் இருப்பது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் ஆளுநர் மீது அரசியல் கட்சியினர் கூறி வருகின்றனர். ஆனால் தேவையில்லாமல், மொழி, மதம், கலாச்சாரம் ஆகியவை குறித்து கருத்துக்களை கூறி, மக்களை அவர் திசை திருப்புவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதனால் தமிழக ஆளுநருக்கு எதிராக பல்வேறு அரசியல் கட்சியினர் ஆளுநர் மாளிகை முன்பு பல்வேறு போராட்டங்களை அவ்வப்போது நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ஆளுநர் ஆர். என் ரவி மசோதாக்களை கிடப்பில் வைத்திருப்பதற்கு எதிராக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனுவில், "தமிழ்நாடு அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை. அரசு அனுப்பும் மசோதாக்கள், உத்தரவுகளுக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் அதனை கிடப்பில் போடுகிறார். எனவே சட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க கால வரம்பு நிர்ணயிக்க வேண்டும்" என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.



▶ காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவு நாள் நேற்று தேசிய மறு அர்ப்பணிப்பு தினமாக அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு நேற்று காலை 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்ட அன்னை இந்திரா காந்தியின் திருவுருவப்படத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையிலும், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலையிலும் மலர் தூவி மரியாதை செலுத்தினர். மேலும் சர்வமத பிரார்த்தனைகள் இசைக்கப்பட்டு தேச பக்தி பாடல்கள் பாடப்பட்டன. நிகழ்வின் இறுதியில் இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஜான்சன் துணை ஆட்சியர்கள் செந்தில்நாதன் , வெங்கடகிருஷ்ணன், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு) நித்தின் குமார் கவுஹால் நகராட்சி ஆணையர் சத்யா ஆட்சியரின் செயலர் பாலு (என்கிற) பக்கிரிசாமி சமூக நலத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராஜேந்திரன் செய்தி மற்றும் விளம்பரத் துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) குலசேகரன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள், சமாதான கமிட்டி உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அம்மையாரின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் தேசிய ஒற்றுமை தினக்கொண்டாட்டம்



புதுக்கோட்டை,நவ.1-

இந்தியாவின் இரும்பு மனிதர் என வர்ணிக்கப்படுபவர் சர்தார் வல்லபாய் படேல். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, நாடு முழுவதும் ஆங்காங்கே துண்டு துண்டாக மன்னராட்சி நடந்துகொண்டிருந்த பல சமஸ்தானங்களை இந்தியாவுடன் ஒன்றிணைத்ததில் படேல் முக்கிய பங்காற்றினார், அவரது பிறந்த நாளான அக்டோபர் 31ஆம் தேதி தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான தேசிய ஒற்றுமை தினம் நேற்று சுதர்சன் பொறியியல் கல்லூரியில், புதுக்கோட்டை மரம் நண்பர்கள் சார்பாக 100 மரக்கன்றுகள் நடப்பட்டது, இதில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை தலைவர் ஜான் ஜோசப் ஒருங்கிணைக்க அத்துறை மாணவ மாணவிகள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டனர் .

இந்நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் ஸ்ரீநிவாஸன் முதல் மரக்கன்றை நட்டு வைத்து துவக்கினார், ஒருங்கிணைப்பாளர்கள் மருத்துவர் ஜி.எட்வின், பேரா. சா.விஸ்வநாதன், கல்லூரியின் முன்னாள் மாணவரும், மரம் நண்பர்களின் உறுப்பினருமான பொறியாளர் ரியாஷ்கான், முன்னாள் மாணவர் சங்க பொறுப்பாளர் பேரா.எஸ்.ஜான் ஜோசப் மற்றும் பேராசிரியர்கள் பலரும் பங்கேற்றனர்.



வரலாறு உலகம்

# இஸ்ரேல்–ஹமாஸ் போரில் 31 பத்திரிகையாளர்கள் உயிரிழப்பு




**டெல் அவிவ் : நவ. 1,**

**இஸ்ரேல்மற்றும்ஹமாஸ் இடையேயான போரில் 31 பத்திரிகையாளர்கள் உயிரிழந்து உள்ளனர்.**

இஸ்ரேல் நாட்டின் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த 7-ந் தேதி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட ராக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. பின்னர் அந்நாட்டு எல்லைக்குள் அதிரடியாக புகுந்து, அந்த பகுதியில் தங்கியிருந்தவர்களை கடுமையாக தாக்கி வன்முறையில் ஈடுபட்டது.

இந்த சம்பவத்தில், 260 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அந்த அமைப்பு 210 பேரை பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றது. இதனை தொடர்ந்து, இஸ்ரேல் அரசும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. அவர்களை மீட்கும் பணியும் நடந்து வருகிறது.

26-வது நாளாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையேயான மோதல் இன்றும் தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில், போர் பற்றிய விவரங்களை கொண்டு வருவதற்காக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் பத்திரிகையாளர்களை அனுப்பி வைத்துள்ளன.

எனினும் போரால், அதில் சிக்கி இதுவரை 31 பத்திரிகையாளர்கள் உயிரிழந்து உள்ளனர் என தி டைம்ஸ் ஆப் இஸ்ரேல் வெளியிட்ட செய்தி தெரிவிக்கின்றது. அந்த 31 பத்திரிகையாளர்களில் 26 பேர் பாலஸ்தீனர்கள் ஆவர். இவர்களை அடுத்து 4 இஸ்ரேல் நாட்டினர் மற்றும் ஒரு லெபனான் பத்திரிகையாளரும் உயிரிழந்து உள்ளனர். இதுதவிர, பத்திரிகையாளர்களில் 8 பேர் காயமடைந்து உள்ளனர். 9 பேர் காணாமலோ அல்லது சிறை பிடிக்கப்பட்டோ உள்ளனர் என்றும் அந்த செய்தி தெரிவிக்கின்றது.

# போர் நிறுத்தத்துக்கு வாய்ப்பில்லை அது ஹமாஸிடம் சரணடைவது போன்றது

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு திட்டவட்டம்



**டெல் அவிவ் : நவ. 1,**

**போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.**

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழுவுக்கும் இடையே அக்டோபர் 7-ம் தேதி முதல் போர் நடந்துவருகிறது. இன்னும் சுமுகமான தீர்வு எட்டப்படவில்லை. அப்பாவி மக்கள் உணவு, தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் காசா வீதிகளில் உலாவும் புகைப்படங்கள் வெளியாகி சகமனிதர்களை கவலையில் ஆழ்த்துகிறது. நேற்று முன்தினம் திங்கள்கிழமை நூற்றுக்கணக்கான நோயாளிகள் காசாவில் உள்ள மருத்துவமனைகளில் சிக்கிக் கொண்டிருப்பதாக பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு டெல் அவிவில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், “காசாவில் போர் நிறுத்தம் தொடர்பான இஸ்ரேலின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்புகிறேன். போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. பயங்கரவாதத்துக்கு அடிபணிவது போல ஆகிவிடும். இது நடக்காது, ஹமாசால் பிடிக்கப்பட்ட பணயக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்க சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும்.

பியர்ல் ஹார்பர் தாக்குதலுக்குப் பிறகும், இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பிறகும் அமெரிக்கா போர் நிறுத்தத்தை நிராகரித்தது. அதே போன்று இஸ்ரேல் மீது அக்டோபர் 7 ஆம் நாள் ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் போர் நிறுத்தம் என்பதை ஒப்புக்கொள்ள இயலாது. இந்தப் போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும்” என கூறியுள்ளார்.

பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் நேற்று முன்தினம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில், தெற்கு காசா பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகரத்தில் நேற்று 93 பேர் பலியாகியுள்ளனர். அக்டோபர் 7 முதல் காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 8,306 பேர் கொல்லப்பட்டனர். இதில் 3,457 குழந்தைகள், 2,136 பெண்கள் மற்றும் 480 முதியவர்கள் அடங்குவார்கள். மேலும், 21,048 பேர் காயமடைந்துள்ளனர். 1,050 குழந்தைகள் உட்பட 1,950 பேரை காணவில்லை. தண்ணீர் பற்றாக்குறையால், தண்ணீர் மூலம் பரவும் நோய்கள் மற்றும் தோல் நோய்கள் பரவலாக காணப்படுகிறது எனக் கூறப்பட்டிருக்கிறது. “எங்கள் மக்கள் மீதான போரை நிறுத்துங்கள்” என்று பாலஸ்தீனபிரதமர் முஹம்மது தெரிவித்திருக்கிறார். ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 1400-க்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா - அமெரிக்கா அதிர்ச்சி

## இலங்கை கடற்பகுதியில் ஆய்வைத் தொடங்கியது சீனக் கப்பல்



**இலங்கை : நவ. 1,**

**இந்தியா மற்றும் அமெரிக்காவின் அதிர்ச்சிக்குரிய நிகழ்வாக, சீனக்கப்பல்’ஷியான் 6’ தனது ஆய்வு நடவடிக்கைகளை, இலங்கை கடற்பகுதியில் நேற்று தொடங்கியது.**

இந்தியப் பெருங்கடலில் சீனாவின்ஏகபோகம்அதிகரித்து வருகிறது. தென்சீனக் கடலில் செயற்கைத் தீவுகளை உருவாக்கி பெருமளவு பெருங்கடல் பிராந்தியத்தை தனது இறையாண்மைக்குரிய ஆளுகையாக சீனா அறிவித்தது. இதற்கு எதிரான அண்டை தேசங்களின் எச்சரிக்கைகள் மற்றும் சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவு ஆகியவற்றை சீனா உதாசீனம் செய்தது.

தென்சீனக் கடல் பரப்பை வளைத்ததன் மூலம் அண்டை தேசங்கள், கடல் வளங்கள் முதல் கடல் போக்குவரத்து வரை உரிமை கோர முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளன. சர்வதேச கடல் போக்குவரத்துக்கு முட்டுக்கட்டை போட்டிருப்பதாக, அந்த பிராந்தியத்தில் உலா வரும் அமெரிக்காவின் எதிர்ப்பும் சீனாவுக்கு எதிராக திரும்பியுள்ளது.

அடுத்ததாக இந்திய பெருங்கடலை குறிவைத்திருக்கும் சீனா, அங்கே கடல் ஆய்வு என்ற பெயரில் இந்தியாவை உளவு பார்க்கவும், இந்திய பெருங்கடல் வளங்கள் மற்றும் போக்குவரத்தை ஆராயவும் செய்து வருகிறது. இதற்காக இலங்கைமுதல்மாலத்தீவுகள் வரை தனது கடல் வலையில் சீனா வீழ்த்தியுள்ளது.

தற்போது இந்தியா மற்றும் அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி, சீனாவின் ’ஷி யான் 6’ என்ற ஆய்வுக் கப்பல் தனது 2 நாள் கடல் ஆய்வினை நேற்று தொடங்கியுள்ளது. இலங்கையின் தேசிய நீரியல் வள ஆராய்ச்சிமற்றும்வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் இந்த ஆய்வு இடம்பெறும் என இலங்கை தெளிபடுத்தி உள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்காவின்ஐயத்துக்குரிய இந்த ’ஷி யான் 6’ கப்பல், 2020 டிசம்பரில் சீனாவின் கடல் ஆராய்ச்சிக் கப்பல்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டது. புவி இயற்பியல் ஆய்வில் கவனம் செலுத்தும் நாட்டின் முதல் அறிவியல் ஆராய்ச்சிக் கப்பல் என்று சீனா கூறுகிறது. இந்த கப்பலின் தற்போதைய ஆய்வு 80 நாட்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. 13 ஆராய்ச்சி குழுக்கள் கூடி 12,000 கடல் மைல்கள் பயணித்து, 28 அறிவியல் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள இருப்பதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

ஆனால் அத்தகைய ஆய்வுகளின் பின்னணி குறித்தும், அவை எந்தளவுக்கு இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரானது என்பது குறித்தும் அமெரிக்காவும், இந்தியாவும் கவலை கொண்டுள்ளன.

கடந்த ஆண்டு, விண்கலத்தை வேவு பார்க்கும் சீனக் கப்பல் ஒன்று, இந்தியாவில்பாதுகாப்புசார்ந்த கவலைகளை வெகுவாக எழுப்பியது. இந்தியாவின் அழுத்ததை அடுத்து, தனது கடற்பரப்பில் இருக்கும்போது சீனாவின் ஆய்வுக்கப்பல் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை தடை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்கிய ஜெர்மனி பெண் மரணம் இஸ்ரேல் ராணுவம் அறிவிப்பு



**டெல் அவிவ் : நவ. 1,**

**ஹமாஸ் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டு, ஆடைகள் களையப்பட்ட ஜெர்மனி பெண் ஷானி லவுக் (22) உயிரோடு இல்லை. அவரது மண்டை ஓடு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.**

கடந்த 7-ம் தேதி இஸ்ரேலின் ரைம் பகுதியில் சூப்பர்நோவா இசை விழா நடைபெற்றது. அப்போது பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகள் இசை விழாவில் புகுந்து கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். இதில் இசை விழாவில் பங்கேற்ற 260 பேர் கொல்லப்பட்டனர். பலர் கடத்திச் செல்லப்பட்டனர்.

சூப்பர்நோவா இசை விழாவில் ஜெர்மனியை சேர்ந்த ஷானி லவுக் கலந்து கொண்டார். ஹமாஸ் தீவிரவாதிகள் அவரை கொடூரமாக தாக்கினர். பின்னர் அவரது ஆடைகளைக் களைந்து ஜீப்பின் பின்பகுதியில் வைத்து தெரு தெருவாக ஊர்வலமாக கொண்டு சென்றனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகிஉலகம்முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

ஷானி லவுக்கின் தாய் ரிகார்டாசமூகவலைதளங்கள் வாயிலாக உருக்கமான வேண்டுகோளை விடுத்தார். அதில் தனது மகளை விடுவிக்குமாறு பாலஸ்தீன மக்களிடம் அவர் மன்றாடினார்.

இதைத் தொடர்ந்து பாலஸ்தீனம் தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில், காசாவில் உள்ள மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் ஷானி சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்த தகவல் பொய் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இஸ்ரேல்ராணுவவீரர்கள் அண்மையில் மண்டை ஓடு ஒன்றை கண்டெடுத்தனர். அதனை மரபணு பரிசோதனை செய்தபோது அது ஷானியின் மண்டை ஓடு என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து ஷானி லவுக் உயிரோடு இல்லை என்று இஸ்ரேல் ராணுவம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த தகவலை ஷானியின் உறவினர்களும் உறுதி செய்துள்ளனர்.

ஷானி லவுக்கின் தாய் ரிகார்டா கூறும்போது, “எனது மகள் ஷானி உயிரிழந்துவிட்டதாக இஸ்ரேல் வெளியுறவுத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். இது மிகவும் துயரமான செய்தி. அவளது இழப்பை தாங்கிக் கொள்ள முடியவில்லை’’ என்று தெரிவித்தார். உறவினர்கள் கூறும்போது, “ஷானி உயிரிழந்திருப்பது உறுதியாகி உள்ளது. அவரது ஆண் நண்பரை காணவில்லை. அவர் ஹமாஸ் தீவிரவாதிகளிடம் சிக்கி இருக்கலாம்’’ என்று தெரிவித்தனர்.

# அமெரிக்காவில் ஓராண்டில் சட்டவிரோதமாக நுழைந்த 42,000 இந்தியர்கள்



**அமெரிக்கா : நவ. 1,**

**அமெரிக்காவில் கடந்த ஓராண்டில் மட்டும் 42,000 இந்தியர்கள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

அமெரிக்காவில் சட்டவிரோத நுழைவு தொடர்பாக நியூயார்க்கின் தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல் என்ற பத்திரிகை நிறுவனம் வெளியிடுள்ள தரவுச் செய்தியில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. அந்தத் தரவுகளின்படி, அமெரிக்காவில் சட்டவிரோதமாக நுழைந்த இந்தியர்களின் எண்ணிக்கை கடந்த நிதியாண்டை விட இந்த நிதியாண்டில் இரு மடங்கு அதிகரித்துள்ளது.

இதில், பெரும்பாலானோர் புகலிடம் தேடி அமெரிக்காவுக்கு வருவதாகவும், இதற்கு முன்பு அமெரிக்காவில் சட்டவிரோதமாக நுழைந்து வேலை செய்து வருவோரின் தூண்டுதலின்பேரில் அதேபோன்று நுழைந்து வேலைவாய்ப்புகளைப் பெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லையைக் கடந்து நுழைய வெளிநாட்டுப் பயண முகவர்களும், போதைப்பொருள் கடத்துபவர்களும் குறிப்பிட்டத் தொகையை பெற்றுக்கொண்டு உதவுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 அக்டோபர் மாதம் வரையில், சர்வதேச அளவில் எல்லையைக் கடந்து சட்டவிரோதமாக நுழைந்ததாக 2 மில்லியன் மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

# இந்தியர்கள் தாய்லாந்து செல்ல விசா தேவையில்லை அந்நாட்டு அரசு அறிவிப்பு



**பாங்காங் : நவ. 1,**

**இந்தியர்கள் தாய்லாந்து செல்ல விசா தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கோடு, இந்தியர்கள் விசா இல்லாமல் 30 நாட்கள் தாய்லாந்தில் தங்கலாம் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.**

உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலா பயணிகள் தாய்லந்திற்கு வந்து செல்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து அதிக சுற்றுலா பயணிகளை கவருவதற்காக முயற்ச்சியாக இந்தியா மற்றும் தைவான் குடிமக்களுக்கு விசா சேவையை தாய்லாந்து அரசு அறிவித்துள்ளது.

அதன்படி இந்தியர்கள் விசா பெறாமலே 30 நாட்கள் வரை தாய்லந்தில் தங்கலாம் எனவும் நவம்பர் 10, 2023 முதல் மே 10, 2024 வரை இந்த விசா சலுகை நடைமுறையில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,.

கடந்த ஒரு வாரத்தில் இந்தியாவுக்கு விசா தள்ளுபடியை அறிவித்திருக்கும் 2வது நாடு தாய்லாந்து அமைந்துள்ளது. இதற்கு முன் இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகளுக்குமார்ச் 31, 2024 வரை விசா இல்லாத நுழைவை அனுமதிப்பதாக இலங்கை அறிவித்தது.

## அதிகரிக்கும் பயங்கரவாதம்

# இன்று முதல் ஆப்கன் அகதிகளை கட்டாயமாக வெளியேற்றும் பாகிஸ்தான்



**பாகிஸ்தான் : நவ. 1,**

**பாகிஸ்தானில் தங்கியிருக்கும் ஆப்கன் அகதிகள் தாமாக வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்றோடு முடிவதால், இன்று முதல் அவர்களை கட்டாயமாக வெளியேற்றுவதற்கான பணிகள் தொடங்கும் என பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.**

பாகிஸ்தானில் தங்கியிருக்கும் சுமார் 17 லட்சம் ஆப்கன் அகதிகளை, ஆப்கானிஸ்தானுக்கு கட்டாயமாக அனுப்பும் பணிகளை பாகிஸ்தான் அரசு இன்று தொடங்க இருக்கிறது. ரஷ்யாவில் தொடங்கி அமெரிக்கா வரை, ஆப்கானிஸ்தான் தேசம் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு ஆதிக்க நாடுகளால் அலைக்கழிக்கப்பட்டு வந்தது. உள்நாட்டுப் போர் காரணமாக லட்சக்கணக்கானோர் அங்கிருந்து வெளியேறி அண்டை தேசமான பாகிஸ்தானில் அடைக்கலம் புகுந்தனர்.

ஆப்கனில் தாலிபன்களின் கை ஓங்கத் தொடங்கியபோது, பாகிஸ்தானிலும் அதன் தாக்கத்தினாலான பயங்கரவாத குழுக்கள் அதிகரித்தன. அந்த குழுக்களால் பாகிஸ்தான் எல்லையிலும், உள்ளாகவும் பயங்கரவாத செயல்கள் அதிகரித்தன. இந்த பயங்கரவாத குழுக்களில், ஆப்கனில் இருந்து அகதிகளாக வந்தவர்களே அதிகம் இடம்பெற்றிருப்பதாக பாகிஸ்தான் கண்டறிந்தது. எனவே, ’பாகிஸ்தான் தாலிபன்’ பயங்கரவாத குழுக்களை அடக்க, ஆப்கன் அகதிகளை ஆப்கானிஸ்தானுக்கே அனுப்ப முடிவு செய்தது.

அதன்படி, ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானிலிருந்து தாமாக வெளியேற நேற்று வரை காலக்கெடுவை முன்னதாக பாகிஸ்தான் அறிவித்தது. பாகிஸ்தான் உத்தரவுக்கு இணங்கி கணிசமானோர் ஆப்கனுக்கு திரும்பினார்கள். ஆனால் சுமார் 2 லட்சம் அகதிகள் மட்டுமே ஆப்கனுக்கு திரும்பியிருப்பதாகவும், சுமார் 17 லட்சம் பேர் உரிய ஆவணங்கள் இன்றி பாகிஸ்தானில் தங்கியிருப்பதாகவும் பாகிஸ்தான் கண்டறிந்தது.

இதனை அடுத்து அவர்கள் அனைவரையும் வலுக்கட்டாயமாக பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றும் பணிகள் இன்று தொடங்கும் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இந்த உத்தரவு பாகிஸ்தானில் செயல்படும் தாலிபன் ஆதரவு பயங்கரவாத குழுக்களை சீண்டியுள்ளதால், பாதுகாப்பு படையினருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இதனையொட்டி ஆப்கன் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் கண்காணிப்பை அதிகரித்துள்ளது.

## அமெரிக்காவில் போராட்டத்தில் குதித்த 46,000 கார் தொழிலாளர்கள்

# 50 சதவீத உற்பத்தி இழப்பு, முடிவுக்கு வரும் போராட்டம்




**அமெரிக்கா : நவ. 1,**


**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அமெரிக்காவில் கார் நிறுவன தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தை அடுத்து, 25 சதவீத ஊதிய உயர்வுக்கு கார் நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளதால் விரைவில் போராட்டம் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

3 ஆண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்தப்பட வேண்டிய ஊதியத்தை 6 ஆண்டுகளாக உயர்த்தாது, ஆலை மூடலுக்கு எதிராக போராட்டம் நடத்த அனுமதி, கூடுதல் தொழிலாளர் பணப்பலங்கள் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அமெரிக்காவில் கடந்த 1ம் தேதி முதல் ஒரு மாத காலமாக, கார் உற்பத்தி நிறுவன தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறது. சுமார் ஒன்றரை லட்சம் தொழிலாளர்களில் 46 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணிகளை புறக்கணித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பிக் 3 என்று அழைக்கப்படும், போர்ட், ஸ்டெலாண்டிஸ், ஜெனரெல் மோட்டார்ஸ் ஆகிய 3 நிறுவனங்களில் வேலைநிறுத்தம் காரணமாக சுமார் 50 சதவீத உற்பத்தி இழப்பு ஏற்பட்டது.

இந்த போராட்டத்திற்கு அமெரிக்க அதிபர் பைடனும் ஆதரவு தெரிவித்திருந்த நிலையில், போர்ட் மற்றும் ஸ்டெலாண்டிஸ் நிறுவனங்கள் ஐக்கிய ஆட்டோ தொழிலாளர்கள் எனப்படும் யு.ஏ.டபிள்யூ தொழிலாளர் சங்கத்துடன் தொடர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, தற்காலிக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதன்படி, 40 சதவீத ஊதிய உயர்வு கேட்ட தொழிலாளர்களுக்கு 25 சதவீத ஊதிய உயர்வு, 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை போன்ற முடிவுகள் எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜெனரெல் மோட்டார்ஸ் நிறுவனமும் தீர்வு உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டுள்ளதால், விரைவில் போராட்டம் முடிவுக்கு வந்து, கார் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது முழு வெற்றி அல்ல என்ற போதும், அடுத்த முறை பேச்சுவார்த்தைக்கு அமரும் போது, தொழிற்சங்கங்கள் இல்லாத டெஸ்லா, டொயோட்டா, ஹோண்டா நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பை உருவாக்கி கொடுத்துள்ளதாக தொழிலாளர் அமைப்பின் தலைவர் ஷான் ஃபெயின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து 18 பயணிகள் பலி



**நைஜீரியா : நவ. 1,**

**நைஜீரியாவின் வடகிழக்கில் உள்ள கரீம் லாமிடோ மாவட்டத்தில் ஆற்றில் இருந்து மயோ ரனேவா கிராமத்துக்கு படகு ஒன்று சென்றது. இதில் குழந்தைகள், வணிகர்கள் உள்பட 100-க்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.**

அதிகம் பேர் பயணம் செய்ததால் படகு ஆற்றில் கவிழ்ந்தது. அதிலிருந்தவர்கள் தண்ணீரில் தத்தளித்தனர். மீட்புப் படையினர் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 18 பேர் பலியானார்கள். 14 பேரை மீட்டனர். 70-க்கும் மேற்பட்டோர் மாயமாகி உள்ளனர். அவர்களை தீவிரமாக தேடி வருகிறார்கள். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, ஆற்றில் மீட்புக் குழுக்கள் இன்னும் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். படகில் 104 பேர் பயணம் செய்துள்ளனர் என்றனர்.

வரலாறு விளையாட்டு

## பெவிலியனில் வைக்கப்பட்டிருந்த வெள்ளை போர்டும்

# ஆப்கானிஸ்தான் அணியின் வெற்றியின் ரகசியமும் விளக்கமளித்த பயிற்சியாளர்

**புனே : நவ. 1,**

**உலகக்கோப்பை தொடரில் ஞயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது. 242 ரன்களை இலக்காக கொண்டு விளையாடிய ஆப்கானிஸ்தான் அணி எவ்வித சிரமமுமின்றி சேஸ் செய்து வியப்பிற்குள்ளாக்கியது.**



ஆப்கானிஸ்தான் அணி 6 போட்டிகளில் விளையாடி 3ல் வெற்றி 3ல் தோல்வி என புள்ளிகள் பட்டியலில் தற்போது 5வது இடத்தில் உள்ளது. நடப்பு உலகக் கோப்பை தொடரில் இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை என முன்னாள் உலக சாம்பியன்களை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அணி அசத்தி வருகிறது.

இது ஒருபுறம் இருக்க, ஞயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் கவனிக்க வைத்த மற்றொரு விஷயம் நடைபெற்றது. ஆப்கானிஸ்தான் 242 ரன்கள் இலக்கை துரத்தி கொண்டிருக்கும்போது அவர்களின் பெவிலியனில் சில எண்கள் எழுதிவைக்கப்பட்டிருந்த ஒரு வெள்ளை போர்டு தென்பட்டது. இதன் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகிவருகின்றன.

இலங்கை அணி நிர்ணயித்த வெற்றி இலக்கை அடைய 10 ஓவர்களில் இவ்வளவு ரன்கள், 20 ஓவர்களில் இவ்வளவுரன்கள், 40 ஓவர்களில் இவ்வளவு ரன்கள் என அந்த போர்டில் எழுதிவைக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து பயிற்சியாளர் ஜொனாதன் டிராட் விளக்கமளித்துள்ளார்.

அதில், "முதல் பேட்டிங்கிற்கும் சேஸிங்கிற்கும் வித்தியாசம் உள்ளது. சூழலை பொறுத்து முதலில் பேட்டிங்கில் ரன்கள் எடுக்க வேண்டி இருக்கும். ஆனால், சேஸிங்கில் அடைய வேண்டிய இலக்கில் இருந்து எந்த மாற்றமும் இருக்காது. பாகிஸ்தான் போன்ற பெரிய அணிகளுக்கு எதிராக 280 ரன்கள் அடிக்க வேண்டும் என்றால், அதனை பூஜ்ஜியத்தில் இருந்து பார்த்தால் எட்ட முடியாத இலக்காக தோன்றும்.

ஆனால் அதனையே 10 ஓவர்களில் இவ்வளவு ரன்கள் எடுத்தால் போதும், 20, 30, 40 ஓவர்களில் இவ்வளவு ரன்கள் எடுத்தால் போதும் என்று சிறிய இலக்காக மாற்றினால் பெரிய டார்கெட் என்ற எண்ணம் குறையும். சிறிய இலக்குகளை அடையும்போது பேட்ஸ்மேன்களுக்கு சரியாக முன்னேறுகிறோம் என்கிற நம்பிக்கை உண்டாகும்.

அதற்காகவே அந்த போர்டில் எழுதப்பட்டிருந்த கணக்குகள். எதிர்பார்த்தபடி அது நன்றாக ஒர்க்அவுட் ஆனது" என்றார். மேலும் "எங்கள் அணியில் இன்னும் யாரும் செஞ்சுரி அடிக்கவில்லை. அதுதான் எங்கள் பேட்ஸ்மேன்களுக்கு அடுத்த சவால்.

யாரேனும் ஒருவர் பொறுப்பேற்றுகொண்டு நீண்ட நேரம் பேட்டிங் செய்து சதம் அடிக்க வேண்டும். எங்கள் வீரர்களால் இதை செய்ய முடியும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இந்த சவால் அடுத்த ஆட்டத்தில் இருந்து தொடங்கும்" என பயிற்சியாளர் ஜொனாதன் டிராட் கூறியுள்ளார்.

# மெஸ்சிக்கு உலகின் உயரிய விருது

## 8வது முறையாக வென்று சாதனை

**பாரிஸ் : நவ. 1,**

**அர்ஜென்டினா கால்பந்து வீரர் லியோனல் மெஸ்சி கால்பந்து உலகின் மிக உயரிய விருதான 'பலோன் டிஆர்' விருதை 8வது முறையாக வென்று சாதனை படைத்துள்ளார்.**



பிரெஞ்சு கால்பந்து இதழான 'பிரான்ஸ்ஃபுட்பால்' கடந்த 1956 முதல் சிறந்த கால்பந்து வீரர்களுக்கான விருதை வழங்கி வருகிறது. அதில் சிறந்த வீரருக்காக அளிக்கப்படுவது 'பலோன் டிஆர்' எனும் உயரிய விருது ஆகும். இந்த ஆண்டுக்கான பலோன் டிஆர் விருதுப் பட்டியலில் பரிந்துரைக்கப்பட்ட வீரர்கள் பட்டியலில் ஆண்கள் பிரிவில் 30 பேர் இடம் பெற்று இருந்தனர்.

ஆகஸ்ட் 2022 முதல் ஜூலை 2023 வரையிலான காலகட்டத்தில் வீரர்களின் செயல்பாடுகளை கணக்கில் கொண்டு இந்த தேர்வு நடைபெற்றது. முதற்கட்ட வாக்கெடுப்பில் முன்னணி கால்பந்து வீரர்களான கெவின் டி ப்ருய்ன், ஹாலண்ட், மெஸ்சி, எம்பாப்பே, ரோட்ரி ஆகியோர் முதல் ஐந்து இடங்களை பிடித்தனர். பின்னர் அதில் லியோனல் மெஸ்ஸி இந்த ஆண்டுக்கான பலோன் டி'ஆர் விருதை வென்றதாக அறிவிக்கப்பட்டது. பிரெஞ்சு வீரர் எம்பாப்பே இந்த முறை விருதை வெல்ல அதிக வாய்ப்பு இருப்பதாக கருதப்பட்டது. அவருக்கும், மெஸ்சிக்கும் இடையேதான் அதிக போட்டி இருந்தது. ஆனால், இறுதியில் மெஸ்ஸி வென்று இருக்கிறார். மெஸ்சி 8வது முறையாக பலோன் டிஆர் விருதை வென்று சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஆண்டு கத்தாரில் நடந்த கால்பந்து உலககோப்பையை அர்ஜென்டினா வென்றது. அந்த அணியின் கேப்டனாகவும், சிறந்த வீரராகவும் இருந்து அந்த அணி கோப்பை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். 8வது முறையாக பலோன் டிஆர் விருதை வென்றுள்ள மெஸ்சி, 2009ஆம் ஆண்டு தன் முதல் விருதை வென்றார். பின் 2010, 2011, 2012, 2015, 2019 மற்றும் 2021இல் இந்த விருதை வென்று உள்ளார். முன்னதாக இதுவரை பலோன் டிஆர் விருதுக்கு அதிகமுறை பரிந்துரைக்கப்பட்ட வீரர் என்ற சாதனையையும் மெஸ்சி படைத்தார். தற்போது இந்த விருதை அதிகமுறை வென்ற வீரர் என்ற பெருமையையும் மெஸ்சி பெற்றுள்ளார்.

# இந்திய மகளிர் ஹாக்கி அணி அபாரம் சீனாவை வீழ்த்தி ஹாட்ரிக் சாதனை



**ராஞ்சி : நவ. 1,**

**ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் மகளிருக்கான 7வது ஆசிய சாம்பியன்ஸ் டிராபிஹாக்கிபோட்டிநடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடந்த போட்டியில் சீனாவை வீழ்த்தி ஹாட்ரிக் சாதனையை இந்திய படைத்துள்ளது.**

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் மகளிருக்கான 7வது ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கி போட்டி நடந்து வருகிறது. கடந்த 27ம் தேதி தொடங்கிய இந்த ஹாக்கி தொடர் வரும் நவம்பர் 5ம் தேதி வரை நடக்கிறது. இந்த ஹாக்கி தொடரில் இந்தியா, ஜப்பான், தென் கொரியா, சீனா, மலேசியா, தாய்லாந்து அணிகள் இடம் பெற்று விளையாடி வருகின்றன.

இந்த நிலையில் தான் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடந்த போட்டியில் இந்தியா மற்றும் சீனா அணிகள் மோதின. இதில், இந்தியா 2-1 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தி ஹாட்ரிக் வெற்றியை பெற்றது. இதில், இந்தியா சார்பில் தீபிகா, சலிமா டெடே ஆகியோர் கோல் அடித்தனர். இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அடுத்து நடக்க உள்ள போட்டியில் இந்தியா நடப்பு சாம்பியனான ஜப்பானை எதிர்கொள்கிறது.

# ஜஸ்பிரீத் பும்ராவை போன்று பாக். வீரர்கள் ஏன் பந்து வீசுவது இல்லை : விளக்குகிறார் வாசிம் அக்ரம்

**புதுடெல்லி : நவ. 1,**

**இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவை போன்று பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் ஏன் பந்து வீசுவது இல்லை என்பதை விளக்கி உள்ளார் முன்னாள் கேப்டன் வாசிம் அக்ரம்.**

ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் ஞாயிற்றுக்கிழமை நடப்பு சாம்பியனான இங்கிலாந்துக்கு எதிராக குறைந்த அளவிலான இலக்கை பாதுகாத்து இந்திய அணி அபார வெற்றி பெற்றதை தொடர்ந்து இந்திய பந்து வீச்சாளர்களுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்திய அணி கேப்டன் ரோஹித் சர்மா சேர்த்த 87 ரன்கள் உதவியுடன் 9 விக்கெட்கள் இழப்புக்கு 229 ரன்களே எடுத்தது.

எனினும் மொகமது ஷமி, ஜஸ்பிரீத் பும்ரா, குல்தீப் யாதவ் ஆகியோரது அபாரமான பந்து வீச்சில் இங்கிலாந்து அணியை 34.5 ஓவர்களில் 129 ரன்களுக்கு மட்டுப்படுத்தியது இந்திய அணி. மொகமது ஷமி 22 ரன்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களையும், ஜஸ்பிரீத் பும்ரா 32 ரன்களை வழங்கி 3 விக்கெட்களையும், குல்தீப் யாதவ் 24 ரன்களைவிட்டுக்கொடுத்து 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். 100 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த விவாதத்தின் போது பாகிஸ்தான் அணியின் முன்னாள் கேப்டன் வாசிம் அக்ரமிடம், ரசிகர் ஒருவர், 'ஜஸ்பிரித் பும்ரா போல பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களால் ஏன் பந்துவீச முடியவில்லை?' என கேள்வி எழுப்பினார். இதற்கு பதில்அளித்து வாசிம் அக்ரம் கூறியதாவது:



இது பதில் சொல்வதற்கு மிகவும் கடினமான கேள்வி. ஜஸ்பிரீத் பும்ரா ஒரு சிறப்பான பந்து வீச்சாளர். அவரைப் போல உலகில் இப்போது யாரும் பந்துவீசவில்லை. பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்கள் குறைந்த அளவிலான டெஸ்ட் போட்டிகளிலேயே விளையாடுகிறார்கள். பும்ரா டெஸ்ட் போட்டிகளிலும் பங்கேற்கிறார்.

காயத்தில் இருந்து மீண்டுவந்துள்ள அவர், தற்போது ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறார். ஒருநாள் போட்டியை போன்று டெஸ்ட் கிரிக்கெட்டிலும் பும்ரா வெற்றியாளராக திகழ்கிறார். டெஸ்ட் கிரிக்கெட்டில் விக்கெட் எடுக்கவில்லை என்றால், கடினமான பந்துகளை வீசவில்லை என்றால், ஒருநாள் போட்டிகளிலும் குறிப்பாக 10-40 ஓவர் காலகட்டத்தில் பேட்ஸ்மேன்களை வீழ்த்துவது கடினம். அங்குதான் பிரச்சினை இருக்கிறது. வழக்கத்துக்கு மாறான அவரது பந்து வீச்சு பாணியால் கட்டுப்பாட்டுடன் செயல்படுவது, வேகம், யார்க்கர், பவுன்சர் என அனைத்து திறனையும் கொண்ட முழுமையான பந்து வீச்சாளராக பும்ரா திகழ்கிறார் என்று வாசிம் அக்ரம் கூறினார்.

வரலாறு சினிமா

# நான் இயக்கி வரும் ஒரு புதிய படத்தின் தலைப்பை விரைவில் அறிவிப்பேன் – பார்த்திபன்

**சென்னை : நவ. 1,**

**நடிகர் பார்த்திபன் 'இரவின் நிழல்' படத்திற்குப் பிறகு தான் இயக்கியுள்ள புதியபடம்குறித்தானவீடியோ ஒன்றை பகிர்ந்துள்ளார்.**



இயக்குநர் பார்த்திபன் இயக்கிய 'இரவின் நிழல்' திரைப்படம் பல கலவையான விமர்சனங்களைப் பெற்றாலும் விருதுகளை பெற்று ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. இதைத்தொடர்ந்து பார்த்திபன் தற்போது புதிய படம் ஒன்றை இயக்கி வருகிறார். இந்த படத்திற்கு இசையமைப்பாளர் இமான் இசை அமைக்கிறார். அதனை சமீபத்தில் தனது அதிகாரபூர்வ எக்ஸ் வலைதளப்பக்கத்தில் அறிவித்திருந்தார்.

இந்தப் படம் குறித்து பார்த்திபன் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "நான் இயக்கி வரும் ஒரு புதிய படத்தின் தலைப்பை விரைவில் அறிவிப்பேன். நான் எடுக்கும் திரைப்படம் ரசனை மிகுந்தவர்களுக்கான திரைப்படம். முழுக்க முழுக்க குடும்பங்கள் கொண்டாடவும் குழந்தைகள் ரசிக்கவும் ஒரு படம் தயாராகிறது. அந்த படத்திற்கான டப்பிங் பணிகள் நடந்து வருகின்றன. என்னுடைய அறிவுக்கு எட்டிய அளவில் படத்தில் உள்ள தவறுகளை திருத்தி உங்கள் பார்வைக்கு எடுத்து வருவேன். படத்தில் விஎஃப்எக்ஸ் பணிகள் நிறைய உள்ளன. நாம் வழக்கமாக ஹாலிவுட் படங்களை மட்டுமே கொண்டாடுவோம். ஹாலிவுட் படங்களைபோல நம்மால் எடுக்கமுடியாது. ஆனால் நமக்கு இருக்கும் ஒரே கட்டுப்பாடு படத்தின் பட்ஜெட்தான்' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், "அவ்வளவு தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காலத்திலேயே அவ்வையார், ஆயிரத்தில் ஒருவன் உள்ளிட்ட பிரம்மாண்ட திரைப்படங்கள் வெளியாகி உள்ளன. நான் எடுக்கும் படம் பிரம்மாண்டமான படம் அல்ல. ஆனால் ரொம்ப நுணுக்கமான படம். நான் விரைவில் உங்களை நல்ல படத்துடன் சந்திக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# மைக் மோகனுக்கு ஜோடியான அனுமோல்

**சென்னை : நவ. 1,**

**நடிகர் மோகனின் கம்பேக் படமான 'ஹரா'வில் நடிகை குஷ்புவுக்குப் பதிலாக வேறொரு நடிகை மாற்றப்பட்டுள்ளது குறித்து படக்குழு புதிய அப்டேட் கொடுத்துள்ளது.**



வெள்ளித்திரை நாயகன் என ரசிகர்களால் கொண்டாடப்பட்டவர் நடிகர் மைக் மோகன். தற்போது, சினிமாவில் பதினான்கு வருடங்களுக்குப் பிறகு மீண்டும் 'ஹரா' படம் மூலம் கம்பேக் கொடுக்கிறார். ஆக்ஷன் என்டர்டெயினராக உருவாகும் இந்தப் படத்தை விஜய்ஸ்ரீ ஜி இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் முதலில் நடிகை குஷ்பு நடிப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், இப்போது அவருக்குப் பதிலாக மலையாளநடிகைஅனுமோல் மோகன் ஜோடியாக ஒப்பந்தமாகியுள்ளார். இது குறித்து இயக்குநர் விஜய் கூறுகையில், "இத்திரைப்படத்தின் படப்பிடிப்புக்கு இடையே எனக்கு சாலை விபத்தில் படுகாயம் ஏற்பட்டதால் சிகிச்சையின் காரணமாக படப்பிடிப்பில் தாமதம் ஏற்பட்டது.

இதன் காரணமாக, 'ஹரா' படப்பிடிப்பு சமீபத்தில் மீண்டும் தொடங்கிய போது தேதிகள் ஒத்துழைக்காததால் ஏற்கெனவே ஒப்பந்தமான பிரபல நடிகைக்கு பதில் மோகன் ஜோடியாக அனுமோல் நடித்துள்ளார். கோத்தகிரியில் விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இறுதிக்கட்ட படப்பிடிப்பு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பண்டிகை வெளியீடாக விரைவில் திரையரங்குகளில் 'ஹரா' வெளியாகும்" என்று கூறினார்.

பள்ளியில் படிக்கும் போதிலிருந்தே ஐபிசி சட்டங்களைமாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதை 'ஹரா' வலியுறுத்துகிறது என்கிறது படக்குழு. இந்தப் படம் தவிர்த்து, 'தளபதி 68' படத்தில் விஜய்க்கு வில்லனாக நடிக்கிறார் மோகன் என்பது குறிப்பிடத்தக்கது.

# சண்டை போட வேண்டியதில்லை; தமிழகத்தில் ஆளுநரும், முதல்வரும் பேசி தீர்வு காணலாம்

## தமிழிசை யோசனை

**புதுச்சேரி : நவ. 1,**

**புதுச்சேரி ராஜ்நிவாஸ் சாலையில் தடுப்புகள் இல்லாததால் பெட்ரோல் குண்டு போட்டுவிடாதீர்கள். சும்மா சண்டையே போடவேண்டியதில்லை. தமிழகத்திலும் முதல்வரும், ஆளுநரும் உட்காந்து பேசி தீர்வு காணலாம் என்று துணைநிலை ஆளுநர் தமிழிசை தெரிவித்துள்ளார்.**

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் மாளிகையில் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களின் உதயநாள் விழா நேற்று நடைபெற்றது. அதைத்தொடர்ந்து துணைநிலை ஆளுநர் தமிழிசை செய்தியாளர்களிடம் கூறியதாவது: "அனைத்துமாநில நாட்களையும் ராஜ்நிவாஸில் கொண்டாடும்போது தேச ஒற்றுமை ஏற்படும். பல மொழி பேசினாலும், பல மாநிலமாக இருந்தாலும் கலாசாரத்தால் ஒன்றிணைந்துள்ளோம்.

யாராலும் பாதுகாப்பற்ற நிலை எனக்கு வராது. புதுச்சேரியில் பதவியேற்றவுடன் மூன்று அடுக்கு பாதுகாப்பு இருந்தது. அனைத்தையும் எடுக்கக்கூறினேன். மத்திய பாதுகாப்பு படை சென்றது. ஓர் அடுக்கு பாதுகாப்பு மட்டும் இருந்தது. போலீஸார் பாதுகாப்பு ஏற்பாடு என்றனர். பாதுகாப்பற்ற நிலை இங்கு இல்லை. பாதுகாப்பு அதிகாரிகள் அதை பார்த்துக் கொள்வார்கள்.

இது பொதுமக்களுக்கான சாலை. அதனால்தான் திறந்துள்ளோம். எதிர்க்கட்சி சகோதரர்கள் பாதுகாப்பு தடுப்புகளை எடுக்கக்கூறிவிட்டு, உங்களால் எந்த ஆர்ப்பாட்டமும் இங்கு நடக்கக்கூடாது என்பதை கோரிக்கையாக வைக்கிறேன். பிரச்சினைஎன்றால்நேரில்வந்து பேசுங்கள். ஆரோக்கியமான சூழல் வேண்டும். ராஜ்நிவாஸ் சாலையில் தடுப்புகள் இல்லாததால் பெட்ரோல் குண்டு போட்டுவிடாதீர்கள். தெலங்கானாவில் மசோதாவுக்கு கையெழுத்து போடாததால் நீதிமன்றம் சென்றார்கள்.

இது அந்தந்த மாநில பிரச்சினை. தமிழக மசோதாவை அந்த ஆளுநர் எதிர்கொள்கிறார் என்பது இரு அமைப்புகளுக்கான பிரச்சினை. அதில் கருத்து சொல்ல விரும்பவில்லை. புதுச்சேரியில் அதிகாரிகள், எம்எல்ஏக்கள், பேரவைத்தலைவர், முதல்வர், அமைச்சர்கள், ஆளுநர் இந்த இணைப்பு சரியாக இருக்கவேண்டும். எங்கு குறை இருந்தாலும் சரி செய்யலாம். அதிகாரிகளால் முதல்வருக்கும் எனக்கும் சங்கடங்கள் இருக்கலாம். அது சரிசெய்யப்பட்டு மாநிலத்தில் மக்கள் பலன் அடைய வேண்டும்.



அரசு பள்ளி மாணவர்களுக்கு மருத்துவத்தில் பத்து சதவிகித இடஒதுக்கீட்டுக்கு மத்திய அரசு விரைவாக ஒப்புதல் தந்தது. மருத்துவ சேர்க்கைக்கு செப்டம்பர் முதல் வாரத்தில் அனுமதி கிடைத்தது. மருத்துவ சேர்க்கையில் அதிகாரிகள் தவறு செய்தார்கள். புதுச்சேரியில் காலம் தாழ்ந்து செப்டம்பர் 30 ஆம் தேதிக்கு பிறகு அனுமதிக்கப்பட்டவர்கள் பாதிக்கக்கூடாது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் தெலங்கானாவில் கோரிக்கை வைத்துள்ளேன். மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாக உள்துறை அமைச்சகம், பிரதமர் அலுவலகம் உறுதி தந்துள்ளனர்.

சென்டாக் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். கடும் முயற்சி எடுத்துள்ளோம். உச்ச நீதிமன்றம் வரையறை தந்துள்ள சூழலிலும், மத்திய அரசு போராடி பெற்றுதருவதாக உறுதி மொழி தந்துள்ளனர். காலம் தாழ்ந்து மருத்துவத்தில் அனுமதிக்கப்பட்ட புதுச்சேரி மாணவர்கள் கவலைப்பட வேண்டாம். உதவி செய்யப்படும். அதிகாரிகள் தவறு இழைத்தனர் என்பதில் மாற்று கருத்து இல்லை. தவறு செய்திருக்கக்கூடாது. நடவடிக்கை எடுக்கப்படும்.

அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் ஆகியோருடன் அதிகாரிகளுக்கு சில கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். அதைகளைந்து ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். தலைமைச்செயலரை அழைத்து பேசினேன். முதல்வரிடமும் பேசியுள்ளேன். அதிகாரிகள் தாமதம் செய்வது கவலை அளிக்கக்கூடியதாக இருந்தது. முதல்வர், அமைச்சர்களை கலந்து ஆலோசித்து சுமூக செயல்முறையாற்ற நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தமிழகத்திலும் முதல்வரும், ஆளுநரும் உட்காந்து பேசி தீர்வு காணலாம். சும்மா சண்டையே போட வேண்டியதில்லை. தெலங்கானாவிலும் இதையே சொல்கிறேன். கருத்து வேறுபாடுகளோடு இருக்கும்போது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. கருத்து ஒற்றுமை தேவை. அது புதுச்சேரியில் இருக்கவேண்டும். அது இருப்பதுபோல் நான் பார்த்து கொள்வேன். தீவிரவாதத்துக்கு எங்கேயும் இடம் கிடையாது" என்று ஆளுநர் தமிழிசை குறிப்பிட்டார்.

# சேலத்தில் பாரதியார் சிலை முன்பு சாதி மறுப்பு திருமணம் : காதல் ஜோடிக்கு குவியும் பாராட்டு

**சேலம் : நவ. 1,**

**சேலம் மாவட்டத்தில் பெற்றோர் சம்மதத்துடன் பாரதியார் சிலை முன்பாக சாதி மறுப்பு காதல் திருமணம் செய்து கொண்ட தம்பதியருக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகிறது.**

சேலம் மாவட்டம் அல்லிக்குட்டை பகுதியில் வசித்து வருபவர் ராஜ்கமல். இவர் வானகம் பகுதியில் இயற்கை விவசாயி பயிற்சிக்கு சென்றிருந்தார். அப்போது அங்கு கல்லூரியிலிருந்து இன்டன்ஷிப் பயிற்சிக்காக வந்திருந்த தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பகுதியைச் சேர்ந்த வைசாலி என்பவருடன் நட்பு ஏற்பட்டது. இருவரும் நண்பர்களாக பழகி வந்த நிலையில் அது காதலாக மாறியது.

மேலும் இவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக காதலித்து வந்தனர். அத்துடன் சாதி மறுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்திட சுயமரியாதை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். அதனால் இவர்கள் காதல் குறித்து வீட்டில் பேசினர். இதற்கு இரு வீட்டார் தரப்பிலும் ஒப்புதல் தெரிவித்தனர். இதையடுத்து, சேலம் சுப்பராயன் சாலையில் உள்ள பாரதியார் சிலை முன்பு இருவரும் மாலை மாற்றி திருமணம் செய்து கொண்டனர்.



அதனைத்தொடர்ந்து இவர்கள் இருவரும் வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழி ஏற்றனர். பல லட்ச ரூபாய் செலவு செய்து திருமண முடிக்கும் இன்றைய காலகட்டத்தில் சில லட்சியங்களோடு சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட காதல் ஜோடியின் செயல் அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவர்களுக்கு பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.






எழுத்தாளர் லால்கிதாப் வெங்கடேஷ் இரண்டாவதாக எழுதியிருக்கும் மர்ம மாளிகை என்ற புத்தகத்தை புதுகை வரலாறு ஆசிரியர் சு. சிவசக்திவேல் வெளியிட கலை முரசு ஆசிரியர் கே.டி. கந்தசாமி பெற்றுக் கொண்டார் அருகில் நூலாசிரியர் உள்ளார்.

# காவிரி விவகாரத்தில் கர்நாடகாவில் இருந்த எந்த அரசும் இவ்வளவு முரண்டு பிடித்தது இல்லை அமைச்சர் துரைமுருகன்

சென்னை, நவ. 1,

"தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் கொடுப்பதில், கர்நாடகாவில் இதுவரையில் இருந்த எந்த அரசும் இவ்வளவு முரண்டு பிடித்தது இல்லை. ஏதோ ஒரு எதிரி நாட்டுடன் மோதுவது போல நினைக்கின்றனர். அல்லது, தமிழகம் ஏதோ அவர்களிடம் சலுகை கேட்பது போல கருதுகின்றனர்" என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

சென்னையில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "காவிரி நீர் விவகாரத்தில், காவிரி ஒழுங்காற்றுக் குழு ஒழுங்காக பணியாற்றவில்லை. காரணம் தமிழகத்தின் சார்பில், நாளொன்றுக்கு 13,000 கனஅடி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று கேட்டோம். ஆனால், அவர்கள் 2,600 கனஅடி தண்ணீர்தான் திறந்துவிட வேண்டும் என்று கூறியுள்ளனர். இந்த தண்ணீர் போதுமானது அல்ல. இதுதான் எங்களுடைய கோரிக்கை. இந்த நிலையில், வரும் 3 ஆம் தேதி காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது. அதுவும் இல்லை என்றால், நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டும்.

1.6.2023 முதல் 26.10.2023 வரை, கர்நாடகம் தமிழகத்துக்கு தரவேண்டிய நீரின் அளவு 140 டிஎம்சி. ஆனால், அவர்கள் வழங்கியது 56.4 டிஎம்சி. ஆகவே, பற்றாக்குறை 83.6 டிஎம்சி. இதுதான் நிலை. குறைபாடு விகிதச்சார நிலையைப் பார்த்தால், 13.03 டிஎம்சி, அதிலும்கூட 3.41 டிஎம்சி நீரைத்தான் கொடுத்துள்ளனர். குறைபாடு விகிதாச்சாரம், நவம்பர் மாதம் கர்நாடகா தமிழகத்துக்கு தரவேண்டிய நீரின் அளவு 16.44 டிஎம்சி. அதுவும் கொடுக்கவில்லை.

தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் கொடுப்பதில், கர்நாடகாவில் இதுவரையில் இருந்த எந்த அரசும் இவ்வளவு முரண்டுபிடித்ததுஇல்லை.ஏதோ ஒரு எதிரி நாட்டுடன் மோதுவது போல நினைக்கின்றனர். அல்லது, தமிழகம் ஏதோ அவர்களிடம் சலுகை கேட்பது போல கருதுகின்றனர். ஆனால், அது அப்படி அல்ல. இந்த நாட்டின் உச்ச நீதிமனறம் விதிக்கும் விதிப்படிதான், இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நடந்துகொள்ள வேண்டும். ஆனால், ஒரு மாநில அரசாங்கமே அவ்வாறு நடந்துகொள்ளமாட்டேன் என்று கூறுவது, ஜனநாயகத்துக்கு நல்லது அல்ல. அதேபோல, பிடிமானம் கொடுக்காமல் பேசுகின்றனர்" என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

## தென்காசி மாவட்டம் புளியங்குடியில்

# பசும்பொன் முத்துராமலிங்க தேவருக்கு116-வது ஜெயந்தி விழா



தென்காசி, நவ.1-

தென்காசி மாவட்டம் புளியங்குடி மேலமந்தை தெருவில் தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 116 ஆவது ஜெயந்தி விழாவும் 61வது குருபூஜை விழாவும் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சங்கரன் கோவில் எம்எல்ஏவுமான ராஜா ஈஸ்வரன் தலைமையில் அலங்கரித்து வைக்கப்பட்ட தேவரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர், நகர் மன்ற துணைத் தலைவரும், திமுக நகரச் செயலாளருமான எ. அந்தோணிசாமி முன்னிலையில் +2,10ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களும் கேடயமும் வழங்கி சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நகர அவைத்தலைவர் வேல்சாமி பாண்டியன், நகர்மன்ற உறுப்பினர் பொன்னுத்துரைச்சி, நகரமாணவர் அணி அமைப்பாளர் சதீஷ், மாணவரணிவீர மணிகண்டன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் விக்ரம் மணிகண்டன், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் விஜயா பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் பத்திர சாகுல், தலைமைக் திமுக பேச்சாளர் சுப்பு,மாவட்ட பிரதிநிதி சுரேஷ்,சேக் மைதீன், டீக்கடை காஜா மைதீன், மாணவரணி முருகேஷ், அ.பாலகிருஷ்ணன் தொமுச, வி.சண்முகசுந்தரம், குரு ராஜ், ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் அன்புராஜ், பரமசிவம், டெய்லர் மைதீன், ஆட்டோமீரான், ஆனந்தராஜ், முருகேசன் ஆசிரியர், ஜே கே, செந்தில்,ஊர்நாட்டாமைகள் எஸ். முத்து பாண்டியன், கே. பரமசிவம், முருகன், வெள்ளத்துரை, செல்வம், இசக்கி, கார்த்திக், மாரிபாண்டி, பெரிய காளி, சுரேஷ் கண்ணன், நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அனைவரையும் வரவேற்று சால்வை அணிவித்து சிறப்புரையாற்றினார் எம். சதீஷ்குமார் நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளும், அன்னதானமும் வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டை காங்கிரஸ் அலுவலகத்தில் இந்திரா காந்தியின் நினைவு நாள் அனுசரிப்பு

புதுக்கோட்டை , நவ.1-

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவு நாளையொட்டி புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கட்சியி அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சந்திரசேகரன் தலைமையில் செயற்குழு உறுப்பினர் தனபதி, மாநில சிறுபான்மை பிரிவு துணை தலைவர் இப்றாஹீம் பாபு, வட்டார தலைவர் சூர்யா பழனியப்பன், நகர தலைவர்கள் மதன் கண்ணன், பாருக், ஜெய்லானி. ஆகியோர் முன்னிலையில் இந்திரா காந்தியின்



திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை தலைவர் எம்ஏஎம் தீன், மாவட்ட ஓபிசி அணித்தலைவர் வீர.துரை சிங்கம், முன்னாள் வட்டார தலைவர் பழனிசாமிபாலாண்டார், முன்னாள் செம்பாட்டுர் ஊராட்சி மன்றத் தலைவர் செம்பைமணி, நகர்மன்ற உறுப்பினர் ராஜா முகமது, ஓபிசி அணியின் நகர தலைவர் மதன் குமார், அடைக்கலம், நாச்சிமுத்து, முத்து விஜயன், காதர் மைதீன், முகமது யூசுப், சகாய ராஜ் உள்பட ஏராளமானோர் கலந்துக்கொண்டனர்.

# எனது பாட்டிதான் எனது பலம் இந்திரா காந்தியை நினைவுகூர்ந்த ராகுல் காந்தி

புதுடெல்லி, நவ. 1-

தனது பாட்டிதான் தனது பலம் என்று மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி நினைவுகூர்ந்துள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 39-வது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி, ராகுல் காந்தி விடுத்துள்ள எக்ஸ் பதிவில், "எனதுபலம், எனதுபாட்டி. அவர் நாட்டுக்காக அனைத்தையும் தியாகம் செய்தார். நாட்டை எப்போதும் நான் பாதுகாப்பேன். உங்கள் நினைவுகள் எப்போதும் என்னுடன் இருக்கின்றன; என் இதயத்தில்" என்று தெரிவித்துள்ளார். இதனிடையே, இந்திரா காந்தியின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடமான ஷக்தி ஸ்தலில் காங்கிரஸ்தலைவர்மல்லிகார்ஜுன கார்கே, முன்னாள் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்திராகாந்தியின்பேரனும், பாஜக எம்பியுமான வருண் காந்தியும் தனது பாட்டிக்கு அஞ்சலி செலுத்தி உள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "எனது பாட்டியின் நினைவு நாளில் அவருக்கு எனது வணக்கம். ஒப்பில்லாத துணிச்சல் கொண்டவர், ஜனநாயக சமதர்மத்தின் முன்னோடி அவர். கடுமையான முடிவுகளை உறுதியுடன் எடுத்தவர். அதேநேரத்தில் எளிமை மற்றும் தாய்மையின் அடையாளமாக விளங்கியவர். உண்மையில் நீங்கள்தான் தேச மாதா" என குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இந்தியாவின் முதல் பெண் பிரதமரும் எங்களின் வழிகாட்டியுமான இந்திரா காந்திக்கு, அவரது நினைவு நாளில் அஞ்சலி செலுத்துகிறேன். நமது நாட்டை வலிமையாகவும், முன்னேற்றகரமாகவும் கொண்டு செலுத்தியதில் மிக முக்கியப் பங்கு வகித்தவர் அவர். திறமை மிக்க தலைமைப் பண்பு, தனித்துவமான செயல் முறை, தொலைநோக்குப் பார்வை கொண்டவர் அவர்" என்று தெரிவித்துள்ளார்.




PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மசோதாக்கள் விவகாரம்: ஆளுநருக்கு எதிராக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு

# கல்வி அமைச்சருடனான பேச்சுவார்த்தை தோல்வி டெட் வெற்றியாளர்கள் விரக்தி






# குடிநீரில் கழிவு நீர் அறந்தாங்கி நகராட்சியை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம்


| சென்னை / புதுக்கோட்டை | 01.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

நரேந்திர தபோல்கர் , இந்திய எழுத்தாளர், செயற்பாட்டாளர் (பி.1945) (இ.2013)



நீத்தா அம்பானி , இந்தியத் தொழிலதிபர் (பி.1863)



கப்டன் மயூரன் , விடுதலைப் புலிப் போராளி (பி.1970) (இ.1993)



## இன்றைய நினைவு நாள்

தியாகராஜ பாகவதர் , தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (பி.1910) (இ.1959)



கே. ஏ. தாமோதர மேனன் , கேரள அரசியல்வாதி, எழுத்தாளர் (பி.1906) (இ.1980)



ஜே. ஆர். ஜெயவர்தனா , இலங்கையின் 1வது அரசுத்தலைவர் (பி.1906) (இ.1996)



## கர்நாடக மாநில நாள் (கருநாடகம்)